# டாக்டர் என்.ஜி.பி. கலை மற்றும் அறிவியல் கல்லூரி

(தன்னாட்சி)

கோயம்புத்தூர் - 641 048.

## செய்திமடல் 2017–2018

### பதிப்புக்குழுவினர்

புரவலர்
**மருத்துவர் நல்ல பழனிசாமி**
தலைவர்
உலகத் தமிழ்ப் பண்பாட்டு மையம்
கோவை மருத்துவமைய ஆராய்ச்சி
மற்றும் கல்வி அறக்கட்டளை

மதியுரைஞர்
**மருத்துவர் தவமணிதேவி பழனிசாமி**
செயலர்
டாக்டர் என்.ஜி.பி. கல்வி நிறுவனங்கள்

தலைமைப் பதிப்பாசிரியர்
**முனைவர் பெ.இரா. முத்துசாமி**
முதல்வர்


பொறுப்பாசிரியர்
**முனைவர் நீ. குப்புச்சாமி**
தமிழ்த்துறைத் தலைவர்

பதிப்பாசிரியர்
**திரு. நா. கிருஷ்ணராஜ்**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை











**நோக்கம் :**

உலகொப்பிய அறிஞர்களால் செவ்வியல் மொழி எனப்போற்றப்படும் தமிழ் மொழியில் விரவிக்கிடக்கும் இலக்கண, இலக்கிய வளங்களை மாணவர்களுக்குக் கற்பித்து அவர்களை ஒழுக்கம், பண்பாடு நிறைந்த மனிதர்களாக வாழச் செய்தல்.

**குறிக்கோள் :**

மாணவர்களின் தமிழ் உணர்வையும், அவர்தம் தனித்திறன்களையும் வெளிக்கொணர்ந்து, மொழி, கலை, இலக்கியம், பண்பாடு ஆகிய துறைகளில் அவர்களைச் சிறந்தவர்களாக மிளிரச் செய்தல்.

## ஆசிரியர் பக்கம்

ஆதிகால மனிதன் பிறவிலங்குகளோடு போரிட்டுத் தன்வாழ்வைத் தக்கவைத்துக்கொண்ட நாள் முதலே அவனின் அனுபவமும் பரிணாம வளர்ச்சி கண்டது. அவ்வளர்ச்சியின் அடையாளமாகத் தன்னைக் கொன்றழிக்கும் வேட்டை விலங்குகளையும் மூளை எனும் கருவி கொண்டு அடக்கியாளக் கற்றுக் கொண்டான். தன்னால் முடியாத வலிய வேலைகளைத் தான் பழக்கப்படுத்திய விலங்குகளைக் கொண்டு செய்வித்தான். பிற உயிர்கள் மூலம் செய்வித்துத் தன் காரியத்தை நிறைவேற்றிய அத்தொடக்கமே ஆளுமையின் முதல் படியாகும்.


அவ்வாளுமை வளர்ச்சியே உற்றுநோக்கும் திறத்தையும் சரியான காலத்தில் சரியான செயல்களைச் செய்யத் திட்டமிடுதலையும் கற்றதோடு, காலமும் திட்டமிடுதலும் தவறின் தன் உயிரும் தவறும் எனும் அதீத எச்சரிக்கை உயர்வால் தன் சந்ததியினருக்குச் செயலாலும் உடற்கூறு மொழியாலும் (சைகை) உணர்த்தினான்.

இந்த உடற்கூறு மொழியும் (சைகை) செயலும் தன்னைப்போன்ற மனிதர்கள் அனைவருக்கும் பயன்படவேண்டும் என்ற கருத்தமைவில் சிற்சில கோடுகளையும் சித்திரங்களையும் வரைந்து தன்கருத்தை உணர்த்தினான். அக்கருத்து அனைத்து மக்களுக்கும் சென்று சேராமல் அக்கருத்தோடும் செயலோடும் தொடர்புடையவர்களுக்கு மட்டுமே சென்று சேரும் எனக்கருதி அனைவருக்கும் பொதுவடிவில் இருக்க வேண்டும் என்ற எண்ணத்தின் விளைவில் முகிழ்த்ததே எழுத்தாகும்.

நெருப்பும் சக்கரமும் கண்டுபிடித்த பின்னர், விரைவும் வினையும் வேகம் எடுத்ததென்றால் எழுத்துமுறை கண்டுபிடித்தபின் ஆறாம் அறிவு முன்னைக்காட்டிலும் பன்மடங்கு வேகமெடுத்தது. தெளிவற்ற ஒலிகள், எழுத்துக்களின் தோன்றலால் தெளிவுறுத்தப்பட்டன. அத்தெளிவின் உச்சமாக பல், இதழ், நா, மூக்கு, அண்ணம் என்னும் வெவ்வேறு உறுப்புகளால் ஒலித்தோன்றலை உண்டாக்கமுடியும் என்ற தொல்காப்பியரின் கூற்றால் மொழி அதன் வளர்ச்சியின் உச்சத்தை எட்டியது.

இத்தகு பண்பட்ட மொழியை உண்டாக்கிய ஆதித் தமிழனின் உழைப்பையும், வரலாற்றையும் எடுத்துரைக்கவும், இன்று வளர்ச்சி பெற்றதாகவும் வணிகத்திற்குப் பயன்படும் மொழியாகவும் உள்ள மொழிகளோடு நம் ஆதித்தமிழும் இடம்பெற வேண்டும் என்றும், பிற மொழிகளைவிட நம்மொழியில் படிக்கும்பொழுது எளிதில் புரிவதோடு படிக்கும் மாணவர்களின் வாழ்வில் இரண்டறக்கலந்து, அவர்களின் வாழ்விற்கு அறியாமை என்னும் இருளை அகற்றி, அறிவு என்னும் விளக்கேற்றும் ஒளியாகவும் விளங்கும் என்பதையும், மொழிநம் அடையாளம், மொழி அழியின் நம் இனம் அழியும் என்ற சிந்தனையையும் பண்டைச் சான்றுகளையும் அவர்களின் வரலாறு, வாழ்க்கை ஆகியவற்றை அறிவதற்கும் நம்மொழி பயன்படும். அதோடு நாம் கடந்து வந்த பாதையை நாமே நின்று, நிதானித்துத் திரும்பிப் பார்ப்பது மன நிறைவு அடையும். நாம் கடந்து வந்த பாதையைத் திரும்பிப் பார்ப்பதற்கும் உறுதுணையாக விளங்குவது மொழியே என்பதை தமிழ்த்துறையின் இந்தச் செய்தி மடலின் வழியாக தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி



## பேராசிரியர்கள் பங்கேற்ற நிகழ்வுகள்



- 06.08.2017 அன்று ஈரோட்டில் நியூ செஞ்சுரி புத்தக நிலையம் சார்பில் நடைபெற்ற புத்தக வெளியீட்டு விழாவில் திரு நா. கிருஷ்ணராஜ் கலந்து கொண்டு அங்கு வெளியிடப்பட்ட புத்தகங்களில் முதல் புத்தகத்தைப் பெற்றுக் கொண்டு விழாவினைச் சிறப்பித்தார்.



- 02.10.2017 அன்று சென்னையில் நடைபெற்ற இராமலிங்கர் பணி மன்ற விருது வழங்கும் விழாவில் நமது கல்லூரியின் சார்பில் திரு நா.கிருஷ்ணராஜ் கலந்துகொண்டு நினைவுப்பரிசினைப் பெற்றுச் சிறப்புச் செய்துள்ளார்.
- தமிழ்த்துறை இளங்கோவடிகள் தமிழ் மன்றத்தின் சார்பில் 07.02.2018 அன்று நடைபெற்ற திருப்பாவை, திருவெம்பாவை ஒப்புவித்தல் போட்டியில் முனைவர் சு.தங்கமணிகண்டன், திரு நா.கிருஷ்ணராஜ் ஆகியோர் நடுவர்களாகப் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.
- டாக்டர் என்.ஜி.பி. கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் இயற்பியல் துறை விழாவினை முன்னிட்டு, பல்வேறு கல்லூரி மாணவர்களுக்கான பேச்சுப் போட்டி நடைபெற்றது. இந்நிகழ்வில் முனைவர் கு.செல்வி, திரு நா.கிருஷ்ணராஜ் ஆகியோர் நடுவர்களாகக் கலந்து கொண்டனர்.

## கட்டுரைகள் மற்றும் கருத்தரங்குகள்

- கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரியில் 11.08.2017 மற்றும் 12.08.2017 ஆகிய இரண்டு நாட்கள், **சங்க இலக்கியங்களில் நிர்வாகவியல் மேலாண்மைக் கோட்பாடுகள்** என்னும் பொருண்மையில் நடைபெற்ற தேசியக்கருத்தரங்கில் முனைவர் கு.செல்வி, திரு நா.கிருஷ்ணராஜ் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புச் செய்தனர்.
- பி.எஸ்.ஜி. ஆர். கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரியில் 5.12.2017 அன்று நடைபெற்ற பன்னாட்டுக் கருத்தரங்கில் **திருக்குறள்– வருக்கக்குறள் இறையியல் கொள்கைகள் ஒப்பீடு** என்னும் தலைப்பில் முனைவர் கு.செல்வி ஆய்வுக்கட்டுரை அளித்திருந்தார்.
- கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரியில் 06.12.2017 அன்று **இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியங்களும் தமிழ் அறிஞர்களும்** என்னும் பொருண்மையில் நடைபெற்ற பன்னாட்டுக் கருத்தரங்கிற்கு, முனைவர் நீ.குப்புச்சாமி, **சூர்ய காந்தன் புதினங்களில் பொருளாதாரா மேம்பாடு** என்னும் தலைப்பிலும் முனைவர் கு.செல்வி, **சிற்பியின் கவிதைகளில் மெய்ப்பாடு** என்னும் தலைப்பிலும் திரு நா.கிருஷ்ணராஜ், **ஆளண்டாப் பச்சியில் உறவுச் சிக்கல்களும் தீர்வுகளும்** என்னும் தலைப்பிலும் ஆய்வுக் கட்டுரைகளை வழங்கினார்கள்.




- உலகத்தமிழ்ப் பண்பாட்டு மையத்தின் சார்பாக மதுரை தியாகராசர் கல்லூரியில் 08.12.2017 அன்று, **மதுரை வட்டார எழுத்தாளர்கள்** குறித்த **வைகைத் தமிழ்** என்றும் பொருண்மையில் கருத்தரங்கம் நடைபெற்றது. இக்கருத்தரங்கிற்கு முனைவர் சு.தங்கமணிகண்டன், **பெருநிலப்பரப்பில் அடங்காத மனிதக் கதைகள்** எனும் தலைப்பில் ஆய்வுக்கட்டுரை வழங்கினார்.



- உலகத்தமிழ்ப் பண்பாட்டு மையத்தின் சார்பில் மதுரை தியாகராசர் கல்லூரியில் 08.12.2017 அன்று நடைபெற்ற வைகைத் தமிழ் நூல்வெளியீடு மற்றும் கருத்தரங்கில் முனைவர் நீ.குப்புச்சாமி முனைவர் சு.தங்கமணிகண்டன், முனைவர் த.சிவக்குமார், திரு நா.கிருஷ்ணராஜ், திரு இரா.தியாகு, முனைவர் க.செந்தில்குமார், திரு மா. தினேஷ்வரன் ஆகியோர் பங்கு பெற்றனர்.

- திருச்செங்கோடு கே.எஸ்.ஆர் கலை அறிவியல் கல்லூரியில் 06.03.2018 அன்று, தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல் கூறுகள் என்னும் பொருண்மையில் நடைபெற்ற உலகளாவிய கருத்தரங்கில் முனைவர் நீ.குப்புச்சாமி, முனைவர் மா.ஜெயச்சந்திரன், செல்வி இரா. வீரமணி, திரு நா.கிருஷ்ணராஜ் ஆகியோர் பங்கேற்றனர்.

- சிவகாசி அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரியில் 07.12.2017 அன்று, உலகளாவிய தமிழ் காலந்தோறும் தமிழ் இலக்கியங்களில் பொருண்மைகளும் புதுமைகளும் என்னும் பன்னாட்டுக் கருத்தரங்கில், தோழி தானே செவிலி மகளே என்னும் தலைப்பில் திரு இரா.தியாகு அவர்கள் கட்டுரை அளித்துள்ளார்.

- திண்டுக்கல் வளர்தமிழ் ஆய்வு மன்றமும் சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரியும் இணைந்து 19.05.2018 மற்றும் 20.05.2018 ஆகிய நாட்களில் 15 ஆவது பன்னாட்டு கருத்தரங்கை நடத்தியது. இக்கருத்தரங்கில் முனைவர் நீ.பகவதியம்மாள், செல்வி மா.மலர்செல்வி, செல்வி இரா.வீரமணி ஆகியோர் பங்கு பெற்றனர்.

- கோவை, பேரூர் தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலை அறிவியல் தமிழ்க் கல்லூரியில், கொங்குநாட்டு யாப்பறி புலவர்கள் என்னும் பொருண்மையில் 02.04.2018 அன்று நடைபெற்ற தேசிய கருத்தரங்கில் முனைவர் சு. தங்கமணிகண்டன், ஈரோடு தமிழன்பன் படைப்புலகம் என்னும் தலைப்பில் ஆய்வுக்கட்டுரை வழங்கினார்.

- உலகத் தமிழ்க் காப்பிய நிறுவனத்தின் திருமூலர் ஆய்விருக்கையின் சார்பில் 25.05.2018 அன்று மலேசியாவில் உலகத் திருமூலர் திருமந்திர மாநாடு நடைபெற்றது. இம்மாநாட்டிற்கு முனைவர் நீ.பகவதியம்மாள், தனக்குத் தானே தலைவனும் ஆமே என்னும் தலைப்பிலும் செல்வி மா.மலர்செல்வி, திருமந்திரத்தில் யோகஞானம் என்னும் தலைப்பிலும் திரு நா. கிருஷ்ணராஜ், திருமந்திரம் காட்டும் வாழ்வியல் சிந்தனைகள் என்னும் தலைப்பிலும் ஆய்வுக் கட்டுரைகளை வழங்கினார்கள்.

## விருதுகள்

- நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர் கவியரசர் கலைத்தமிழ் சங்கம் சார்பில் 71 ஆவது சுதந்திர தின விழா மற்றும் கல்விச் சாதனையாளர்களுக்கான விருது வழங்கும் விழா கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் முனைவர் நீ.பகவதியம்மாளின் கல்விச் சேவையைப் பாராட்டி கல்விச்செம்மல் 2017 விருது வழங்கப்பட்டது.

- நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர் குறிஞ்சிக் கபிலர் தமிழ்ச் சங்கம் சார்பில் 69 ஆவது குடியரசு தினவிழா மற்றும் கல்விச்சாதனையாளர்களுக்கான விருது வழங்கும் விழா கொண்டாடப்பட்டது. அவ்விழாவில் செல்வி மா.மலர்செல்வி, திரு நா.கிருஷ்ணராஜ் ஆகியோரின் கல்வித் தொண்டினைப் பாராட்டி, பேராசான் விருது 2018 என்னும் விருது வழங்கப்பட்டது.

- 21.12.2017 அன்று திருவாவடுதுறை ஆதினம் சித்தாந்த இரத்தினம் விருதினை முனைவர் நீ பகவதியம்மாள், செல்வி மா.மலர்செல்வி ஆகியோருக்கு வழங்கிச் சிறப்பித்தது.

## பயிலரங்கம்

- கோவை பூ.சா.கோ கலை அறிவியல் கல்லூரியில் 17.03.2018 அன்று, தமிழ் மொழிபெயர்ப்பு-செல்நெறிகள் என்னும் பொருண்மையில் நடைபெற்ற திறன் மேம்பாட்டு உரையரங்கில் முனைவர் நீ. குப்புச்சாமி, முனைவர் நீ.பகவதியம்மாள், முனைவர் கு.செல்வி, செல்வி மா.மலர்செல்வி, செல்வி இரா.வீரமணி, திரு நா.கிருஷ்ணராஜ், முனைவர் க.செந்தில்குமார் ஆகியோர் பங்கேற்றனர்.

## புத்தாக்கப் பயிற்சி

- கோவை பாரதியார் பல்கலைக்கழகத்தில் மனிதவள மேம்பாட்டு மையத்தின் சார்பில் 10.05.2017 முதல் 07.06.2017 வரை 28 நாட்கள் நடைபெற்ற புத்தாக்கப் பயிற்சி வகுப்பில் முனைவர் சு.அனுசுயா பங்கேற்றார்.

## இணைய இதழ்கள்

- ஆய்த எழுத்து என்ற பன்னாட்டு தமிழியல் ஆய்வு இதழில் (ISSN: 2278 - 7550) ஜூலை 2017ல் கவிஞர் பூபாலனின் பறக்க எத்தனிக்கும் ஒற்றை இறகு முன் வைக்கும் இருத்தலியம் என்னும் தலைப்பில் முனைவர் சு.அனுசுயா ஆய்வுக்கட்டுரை வழங்கினார்.

- பதிவுகள் என்ற பன்னாட்டு இணைய இதழில் (ISSN: 1481 - 2991) ஜனவரி 2018ல் தொல்காப்பிய எழுத்ததிகாரத்தில் சார்பெழுத்துகள் குறிந்த மறுப்புரைகள் என்ற தலைப்பில் திரு மா.தினேஷ்வரன் அவர்கள் ஆய்வுக்கட்டுரை வழங்கினார்.

- பதிவுகள் என்ற பன்னாட்டு இணைய இதழில் (ISSN: 1181 - 2991) பிப்ரவரி 2018ல் **நிழல் முற்றம் புலப்படுத்தும் சிறுவர்களின் வாழ்வியல்** என்னும் தலைப்பில் திரு நா.கிருஷ்ணராஜ் அவர்களின் ஆய்வுக் கட்டுரை வெளியானது.

- பதிவுகள் என்ற பன்னாட்டு இணைய இதழில் (ISSN: 2394 - 0948) மார்ச்சு 2018ல் **தொல்காப்பிய எழுத்ததிகாரத்தில் வரிவடிவம் சார் உரை மறுப்புகள்** என்ற தலைப்பில் திரு மா.தினேஷ்வரன் அவர்கள் ஆய்வுக்கட்டுரை வழங்கினார்.

- ஆய்த எழுத்து என்ற பன்னாட்டு தமிழியல் ஆய்வு இதழில் (ISSN: 2278 - 7550) மே 2018ல் **பெண்ணுரிமை மறுப்புக்கான காரணத் தேடல்கள்** என்னும் தலைப்பில் முனைவர் நீ.பகவதியம்மாள் ஆய்வுக் கட்டுரை வழங்கினார்.

## உலகத்தமிழ் பண்பாட்டு மையம்

- கோயமுத்தூர், டாக்டர் என்.ஜி.பி. கலை மற்றும் அறிவியல் கல்லூரி வளாகத்தில் **தமிழர் நலம்; தமிழின் வளம்** என்னும் சீரிய குறிக்கோளோடு உலகத் தமிழ்ப் பண்பாட்டு மையம் செயல்பட்டு வருகிறது. கோவை மருத்துவ மைய ஆராய்ச்சி மற்றும் கல்வி அறக்கட்டளையின் தலைவர் மருத்துவர் நல்ல பழனிசாமி ஐயா அவர்களைத் தலைவராகக் கொண்டு உலகத் தமிழ்ப் பண்பாட்டு மையம் செம்மையாகச் செயல்பட்டு வருகிறது. பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும் என்னும் மகாகவியின் வாக்கிற்கேற்ப மூலை முடக்குகளில் மறைந்து கிடக்கும் தமிழ் அறிஞர்களையும் இலக்கியங்களையும் தமிழ் கூறும் நல்லுலகிற்கு அடையாளப்படுத்திக் கொண்டிருப்பவர் இம்மையத்தின் தலைவர் அவர்கள். தன்னை மறப்பினும் தமிழை




மறவேன் என்னும் செம்மாந்த குறிக்கோளுடன் இளம் தலைமுறையினருக்கு, உலகத் தமிழ்ப் பண்பாட்டு மையத்தின் சார்பில் ஆண்டுதோறும் விருதுகள் வழங்குதல், பணமுடிப்பு வழங்குதல், நூல் வெளியீடு போன்ற பல்வேறு தமிழ்ப் பணிகளையாற்றி வருகிறார் தலைவர் நல்ல பழனிசாமி ஐயா அவர்கள்.

## நூல் வெளியீட்டு விழா

- உலகத்தமிழ்ப் பண்பாட்டு மையத்தின் சார்பில் மதுரை தியாகராசர் கல்லூரியில் 08.12.2017 அன்று, சங்கம் கண்ட மதுரை வட்டார எழுத்தாளர்கள் குறித்த ஆய்வுக் கட்டுரைகள் தொகுக்கப்பட்டு, **வைகைத் தமிழ்** என்னும் நூலாக ஆக்கப்பெற்று, நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது. 25 அறிஞர்களின் கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றிருந்தன. நூல் வெளியீட்டு விழாவினை முன்னிட்டு உலகளாவிய ஒரு நாள் கருத்தரங்கமும் நடைபெற்றது. இந்நூல் வெளியீட்டு விழாவினை கோவை மருத்துவ மைய ஆராய்ச்சி மற்றும் கல்வி அறக்கட்டளையின் தலைவரும் உலகத் தமிழ்ப் பண்பாட்டு மையத்தின் தலைவருமான மருத்துவர் நல்ல பழனிசாமி ஐயா அவர்கள் தலைமையேற்றுத் தொடங்கி வைத்தார். மதுரை தியாகராசர் கல்லூரியின் தலைவர் திருமிகு. கருமுத்து தி.கண்ணன் அவர்கள் வைகைத் தமிழ் நூலினை வெளியிட்டுத் தொடக்கவுரை நிகழ்த்தினார். சாகித்திய அகாதமி விருது பெற்ற எழுத்தாளர், கவிஞர் வண்ணதாசன் அவர்கள் கருத்தரங்கைத் துவக்கி வைத்துச் சிறப்புரையாற்றினார். மதுரை வட்டாரப் படைப்பாளர்களுக்கு உலகத் தமிழ்பண்பாட்டு மையத்தின் சார்பில் நினைவுப்பரிசுகள் வழங்கப்பட்டன.



## விருதுகள் வழங்கும் விழா

- தமிழ் அறிஞர்களுக்கும் படைப்பாளர்களுக்கு ஆண்டுதோறும் விருதுகள் வழங்கிச் சிறப்புச் செய்து வருகிறது உலகத் தமிழ் பண்பாட்டு மையம். இப்பண்பாட்டு மையத்தின் ஐந்தாம் ஆண்டு விருதுகள் வழங்கும் விழா 16.12.2017 அன்று டாக்டர் என்.ஜி.பி. கலை மற்றும் அறிவியல் கல்லூரி கலையரங்கில் நடைபெற்றது. இவ்விழாவிற்கு கோவை மருத்துவமைய ஆராய்ச்சி மற்றும் கல்வி அறக்கட்டளையின் தலைவர் மருத்துவர் நல்ல பழனிசாமி ஐயா அவர்கள் தலைமையுரை வழங்கி சிறப்புச் செய்தார். டாக்டர் என்.ஜி.பி. கல்விக் குழுமங்களின் செயலர் மருத்துவர் தவமணிதேவி பழனிசாமி அம்மா அவர்கள் வரவேற்புரை நல்கினார். சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி மாண்பமை நீதியரசர் ஆர்.மகாதேவன் அவர்கள் விருதுகளை வழங்கிச் சிறப்புரை நிகழ்த்தினார். **பேராசிரியர் சிலம்பொலி செல்லப்பனார்** அவர்களுக்கு, **தமிழ்த்தாத்தா உ.வே.சா**

விருதும், **எழுத்தாளர் வண்ணநிலவன்** அவர்களுக்கு, **பெரியசாமித்தூரன் தமிழ் படைப்பாளர்** விருதும், **பேராசிரியர் முனைவர் க.மணி** அவர்களுக்கு, **டாக்டர் நல்ல பழனிசாமி பிறதுறைத் தமிழ்த் தொண்டர்** விருதும் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது.

## தமிழ்துறையின் செயல்பாடுகள்

- 14.07.2017 அன்று, நாடகம் குறித்த விழிப்புணர்வை இன்றைய இளம் தலைமுறையினரிடம் ஏற்படுத்தும் வகையில் சிறப்புச்சொற்பொழிவு நடைபெற்றது. **உடல் திறக்கும் நாடக நிலம்** என்னம் தலைப்பில் பூ.சா.கோ கலை அறிவியல் கல்லூரியின் தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் **முனைவர் லி.ராமராஜ்** அவர்கள் சிறப்பு விருந்தினராக் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்.

## இளங்கோவடிகள் தமிழ்மன்றத் துவக்க விழா

- தமிழ்த்துறையின் இளங்கோவடிகள் தமிழ் மன்றத் துவக்க விழா 18.07.2017 அன்று நடைபெற்றது. **எழுத்தாளர் திரு பாஸ்கர் சக்தி** அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு **நானும் புத்தகங்களும்** எனும் தலைப்பில் சிறப்புரையாற்றினார். இன்றைய வாழ்க்கைச் சூழலில் வாசிப்பின் முக்கியத்துவம் நோக்கம், பயன் இவைகளைப் பற்றி மாணவர்களுக்கு எடுத்துரைத்தார்.




- 30.07.2018 அன்று என்.ஜி.பி. கலையரங்கில் இராமலிங்கர் பணிமன்றமும் டாக்டர். என்.ஜி.பி. கலை மற்றும் அறிவியில் கல்லூரியின் தமிழ்த்துறையும் இணைந்து பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கான பல்வேறு கலை இலக்கியப் போட்டிகளை நடத்தின. மண்டல அளவில் நடைபெற்ற இப்போட்டிகளில் 600க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர். போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.





- கோயம்புத்தூர் இந்துஸ்தான் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 11.08.2017 அன்று மாநில அளவிலான இலக்கியப் போட்டிகள் நடைபெற்றது. டாக்டர் என்.ஜி.பி. கலை மற்றும் அறிவியல் கல்லூரியைச் சார்ந்த 44 மாணவ, மாணவியர் பங்கேற்றனர். இளங்கலை இரண்டாமாண்டு கணினி அறிவியல் துறையைச் சார்ந்த சௌமியா என்ற மாணவி மூன்றாம்பரிசு பெற்றார்.



- டாக்டர் என்.ஜி.பி. கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் இளங்கோவடிகள் தமிழ்மன்றமும் கோவை கம்பன் கழகமும் இணைந்து, 14.12.2017 அன்று சுழலும் சொல்லரங்கம் நிகழ்வினை நடத்தினார்கள். **பாலகாண்டத்தில் பெரிதும் விஞ்சி நிற்கும் உணர்வு எது?** என்னும் தலைப்பில் நடைபெற்ற இந்தச் சொல்லரங்கினை கல்லூரியின் முதல்வர் முனைவர் பெ.இரா.முத்துசாமி அவர்கள் தொடங்கி வைத்து உரையாற்றினார். கோவை கம்பன் கழகத்தின் செயலாளர் திரு நஞ்சுண்டன், துணைச் செயலாளர் புலவர் சு.முரளி ஆகியோர் நடுவர்களாகப் பங்கு பெற்றுப், போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகளை வழங்கினார்கள்.

- 11.01.2018 அன்று டாக்டர் என்.ஜி.பி. கல்லூரி மருத்தாக்கவியல் வளாகத்தில் பாரதி நினைவுப் பெருவிழா கொண்டாடப்பட்டது. டாக்டர் என்.ஜி.பி.கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் நீ.குப்புசாமி அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு **அச்சம் தவிர்** என்னும் தலைப்பில் சிறப்புரையாற்றினார்.



## தமிழோசை வெளியீட்டு விழா

- மாணவர்களின் படைப்பாளுமையையும் திறமைகளையும் ஊக்குவிக்கும் வகையில் இளங்கோவடிகள் தமிழ்மன்றத்தின் சார்பாக ஆண்டுதோறும் தமிழோசை இதழ் வெளியீட்டு விழா நடைபெற்று வருகிறது. 20 ஆவது தமிழோசை வெளியீட்டு விழா 21.03.2018 அன்று நடைபெற்றது. தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் த.சிவக்குமார் அவர்கள் பதிப்பாசிரியராகப் பணியாற்றி இதழைச் செம்மையாக உருவாக்கியிருந்தார். தமிழக மேனாள் காவல் துறைக் கண்காணிப்பாளர் திரு.கலியமூர்த்தி அவர்கள் இதழை வெளியிட்டு, **எண்ணமே வாழ்வு** என்னும் தலைப்பில் சிறப்புரையாற்றினார். முன்னதாக கோவை மருத்துவமைய ஆராய்ச்சி மற்றும் கல்வி அறக்கட்டளையின் தலைவர் மருத்துவர் நல்ல பழனிசாமி ஐயா அவர்கள் தலைமையுரையாற்றினார். டாக்டர் என்.ஜி.பி.கல்வி குழுமங்களின் தலைவர் மருத்துவர் தவமணி தேவி பழனிசாமி அம்மா அவர்கள் முதல் இதழைப் பெற்றுக்கொண்டு, சிறப்பு விருந்தினருக்கு நினைவுப் பரிசு வழங்கினார்.

## புறநிலைச் செயல்பாடுகள்

- 13.10.17 அன்று தமிழ்த்துறையின் சார்பில் பள்ளி மாணவர்களின் திறமைகளை வெளிக்கொணரும் நோக்கில் சின்னவேடம்பட்டி இராமானந்த அடிகளார் உயர்நிலைப்பள்ளியில் மாணவர்களுக்கு பேச்சுப் போட்டி, கட்டுரைப்போட்டி, கவிதைப் போட்டி ஆகிய பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டன. தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் முனைவர் கு.செல்வி, முனைவர் மா.ஜெயச்சந்திரன், திரு நா.கிருஷ்ணராஜ் ஆகியோர் நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்து நடத்தினர். வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.



- டாக்டர் உ.வே.சா. அவர்களின் பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு 26.02.2018 இராசிபாளையம் அரசினர் நடுநிலைப் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு, பாரதிதாசன் பாடல்கள் ஒப்புவித்தல் போட்டி, ஓவியப்போட்டி போன்ற போட்டிகள் நடத்தப்பட்டன. இந்நிகழ்வினை, தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் முனைவர் கு.செல்வி, முனைவர் மா.ஜெயச்சந்திரன் ஆகியோர் சிறப்பாக நடத்தினர். வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.



# Dr. N.G.P. ARTS AND SCIENCE COLLEGE

**(Autonomous)**

Dr. N.G.P. - Kalapatti Road, Coimbatore - 641 048, INDIA.
Phone : (0422) 2369100, 2369252, 2369253
E-mail : drngparts@kmch.ac.in